# வசதிகுறைந்தோர் வாழ்க்கை மேம்பட உழையுங்கள்: இன்:போசிஸ் நாராயண மூர்த்தி

By ரவிசிங்காரம்

**Tamil Murasu, Page 2, Section:** சிங்கப்பூர்
**Friday 21 November 2025**
**268 words, 161cm² in size**
**8,400 circulation**

## Work to improve the lives of the underprivileged: Infosys Co-Founder Narayana Murthy

## வசதிகுறைந்தோர் வாழ்க்கை மேம்பட உழையுங்கள்: இன்ஃபோசிஸ் நாராயண மூர்த்தி

**ரவி சிங்காரம்**

அதிக நேரம் வேலை செய்வது பற்றியே குறைகூறாமல் பிறரது வாழ்வில் மேன்மை சேர்ப்பதை மையப்படுத்த மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் முன்னணி மென்பொருள் நிறுவனமான இன்ஃபோசிஸ் நிறுவனர் திரு நாராயண மூர்த்தி.

இந்தியர்கள் பலரும் அன்றாட வாழ்வில் சிரமப்படும் நிலையில், ஓரளவு நல்ல நிலையில் இருப்பவர்கள், தம்மைவிட வறியவர்களை நினைவுகூர்ந்து, தேசத் தந்தையரின் தியாகங்களை நினைவுகூர்ந்து, தம் நாட்டுக்கு எது சிறந்தது எனத் தீர்மானித்துச் செயல்படவேண்டும் என்று திரு நாராயண மூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

வியாழக்கிழமை (நவம்பர் 20) சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தில் (எஸ்எம்யு) நடைபெற்ற தொலைநோக்குப் பார்வைத் தொடரில் பங்கேற்ற போது அவர் இவ்வாறு கூறினார்.

சிங்கப்பூரை உருவாக்க தம் முழுநேர வேலைகளைத் தியாகம் செய்த தேசத் தந்தையர் லீ குவான் யூ, எஸ் ராஜரத்தினம், கோ கெங் சுவீ போன்றோரையும், இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட ஜவஹர்லால் நேரு, சர்தார் பட்டேல் போன்றோரையும் அவர் முன்மாதிரிகளாகச் சுட்டினார்.

“இந்தியா, அர்ப்பணிப்புமிக்கோரால் உருவாக்கப்பட்டது. தொலைதூரச் சிற்றூர்களில் உள்ள குழந்தைகளுக்கும் அடிப்படை உணவு, கல்வி, வீடு போன்றவை கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் இலட்சியம். அவர்களுடன் ஒப்பிடுகையில், நாம் செய்யும் எதுவும் ஒன்றுமில்லை என்பது போலத்தான்.

“நான் அமெரிக்காவில் தொழில்துறையில் முன்னணி வகிப்போரிடம் பேசினேன். ‘என்னைச் சுற்றியுள்ள பலரும் அறிவாளிகள். ஆனால், அவர்களைவிடக் கடினமாக உழைக்கும் ஆற்றலை இறைவன் எனக்குத் தந்துள்ளார்’ என்றே அவர்கள் கூறினர்,” என நினைவுகூர்ந்தார் திரு நாராயண மூர்த்தி. கேள்வி-பதில் அங்கத்தை வழிநடத்திய எஸ்எம்யு அறங்காவலர் வாரியத் தலைவர் பியூஷ் குப்தா, “வேலை-வாழ்க்கை என்பது செயற்கையான பிரிவினை. உங்கள் வேலை பிடித்திருந்தால் அது உங்கள் வாழ்வின் உள்ளார்ந்த பகுதியாகும்,” என்றார்.




எஸ்எம்யு முன்னாள் மாணவர் வரைந்த ஓவியத்தை எஸ்எம்யு அறங்காவலர் வாரியத் தலைவர் பியூஷ் குப்தா (வலம்), இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயண மூர்த்திக்கு அன்பளிப்பாக வழங்கினார். **படம்: ரவி சிங்காரம்**

### நான்காவது சிங்கப்பூர்-இந்தியா ‘ஹேக்கத்தான்’

2026ல் நடைபெறவுள்ள நான்காம் சிங்கப்பூர்-இந்தியா ஹேக்கத்தான் போட்டியும் தொடங்கப்பட்டது.

“எஸ்எம்யுவின் 25வது ஆண்டு நிறைவிலும் சிங்கப்பூர், இந்தியாவுக்கு இடையேயான அரசதந்திர உறவுகளின் 60வது ஆண்டு நிறைவிலும் இந் நிகழ்ச்சி நடைபெறுவதால் இது மிக அர்த்தமுள்ள நிகழ்ச்சி,” எனக் காணொளி வழியாகக் கூறினார் கல்வி அமைச்சரும் சமூக சேவைகள் ஒருங்கிணைப்பு அமைச்சருமான டெஸ்மண்ட் லீ.

rsingaram@sph.com.sg

Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.